சாட்சிகளின் வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் -23)
**உதவி அமர்வு நீதிமன்றம், பெருந்துறை.**
**அமர்வு வழக்கு எண்: 131/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் அ.சா. 2ஆக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.எம்.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., உதவி அமர்வு நீதிபதி, பெருந்துறை அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது. பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | மகேஷ் குமார் |
| த.க.பெயர் | நல்லசாமி |
| கிராமம் | வெள்ளியம்பாளையம் |
| மாவட்டம் | |
| வயது | 42 |

| ஆஜர் எதிரிகள் | ஆஜரில்லாத எதிரிகள் |
|---|---|
| 1.ரகு (எ) மேட்டுர் ரகு<br>2.அரவிந்த் (எ) மச்சி அரவிந்த்<br>3.செந்தில்குமார் (எ) அரைப்பால் செந்தில்<br>4.கனகசபாபதி | |

நாள் 10.03.2026

அ சா 2 முதல் விசாரணை

நான் வெள்ளிம்பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் தச்ச வேலை தனியாக செய்து வந்தேன். அசா 1 ஐ எனக்கு தெரியும். அசா 1 சென்னிமலை ஈங்கூர் சாலையில் பர்னிசர் கடை வைத்திருந்தார். எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது**

**குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)**

நான் கடந்த 12.09.2012 அன்று அசா 1ன் கடையில இருந்தபோது 3 நபர்கள் கடைக்கு வந்து தேக்கு மரக் கட்டில் 2 புதிதாக செய்து தரவேண்டும என்று கேட்டார்கள் என்றும், அசா 1 இரண்டு கட்டிலுக்கு ரூ.60,000/- ஆகும் என்று

சொன்னார் என்றும், அசா1 வந்தவர்களை பார்த்து நீங்கள் எந்த ஊர் என்று கேட்டபோது உயராமாக தாடியுடன் இருந்தவர் மேட்டுர் ரகு என்றும் அவருடன் வந்தவர் குஞ்சாண்டியூரை சேர்ந்த அரவிந்தன் என்றும் பவானியை சேர்ந்த செந்தில்குமாா என்றும் சொன்னார் என்றால் சரியல்ல. 15.09.2017 அன்று நான் கடைக்கு வந்தபோது கடை பூட்டியிருந்தது என்றும், அன்று இரவு அசா1 கடையை பூட்டி விட்டு கிளம்பும் போது அவரை ஏற்கனவே கட்டில் கேட்டு வந்த நபர்கள் ஸ்கார்பியோ காரில் அவரை கடத்தி சென்று அத்தாணி அருகே மேவானி என்ற இடத்தில் முனுசாமி தோட்டத்தில் உள்ள வீட்டில் அடைத்து வைத்து பணம் கேட்டதாகவும், சித்தரவதை செய்தததாகவும் பணத்திற்கு பதிலாக அவரது மகன் மணிகண்டன் அசா1 ன் காரை எடுத்துச் சென்று அவர்கள் சொன்ன இடத்தில் விட்டு விட்டு பின்பு அவர்கள் அசா1 ஐ சித்தோடு வரை கூட்டி வந்து விட்டு விட்டு சென்றதாகவும் இது சம்பந்தமாக அசா1 சென்னிமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அந்த புகார் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில் ) இல்லை

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.10 16:56:32 -1000

Assistant Sessions Judge,
Perundurai.

uploaded by SS